www.Padasalai.Net www.CBSEtips.in

**11 - STD** காலாண்டு தேர்வு 2023

வரலாறு

மதிப்பெண் 90 கால அளவு -3.00 மணி

பகுதி–I

கொடுக்கப்பட்டுள்ளவினாக்களில் சரியானவிடையைதேர்ந்தெடுத்துஎழுதவும். **20x1=20**

1. பர்சஹோம் ------ நிலவிய இடமாகும்.
(அ)காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடு (ஆ) கங்கைச் சமவெளியின் புதிய கற்காலப் பண்பாடு (இ) கிழக்கிந்தியாவின் புதிய கற்காலப பண்பாடு (ஈ)தென்னிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு
2. வரலாற்றின் பழமையான காலம் ------- ஆகும்.
(அ) பழங்கற்காலம் (ஆ) புதியகற்காலம் (இ)செம்புக்காலம் (ஈ) இரும்புக்காலம்
3. ஆதிச்சநல்லூர் -------- மாவட்டத்தில் அமைந்துள்ளது.
(அ)கோயம்புத்தூர் (ஆ) திருநெல்வேலி (இ) தூத்துக்குடி (ஈ)வேலூர்
4. அஜாதசத்ருவுக்கும் புத்தருக்குமிடையேயான சந்திப்பைக் குறிப்பிடும் பௌத்த நூல்-------
(அ) சீவகசிந்தாமணி (ஆ) அச்சரங்கசூத்திரம் (இ) கலபசூத்திரம் (ஈ) சமனபலசுத்தா
5. வட இந்தியாவில் 16 மகாஜன பதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு --- ஆகும்.
(அ) கோசலம் (ஆ). அவந்தி (இ)மகதம் (ஈ) குரு
6. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர்
(அ)தாமஸ் சாண்டர்ஸ்(ஆ)ஜேம்ஸ் பிரின்ஸ்செப்(இ)சர் ஜான் மார்ஷல்(ஈ)வில்லியம் ஜோன்ஸ்
7. -------- நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்
(அ) முத்ராராட்சசம் (ஆ) ராஜதரங்கிணி (இ)அர்த்தசாஸ்திரம் (ஈ) இண்டிகா
8. --------- ராஜசூய யாகத்தை நடத்தியவர்
(அ) பெருநற்கிள்ளி(ஆ)முதுகுடுமிப் பெருவழுதி (இ)சிமுகா (ஈ)அதியமான்
9. இந்தோ- கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர்
(அ) யூதிடெமஸ் (ஆ) டெமெட்ரியஸ் (இ) மினாண்டர் (ஈ) ஆன்டியால்ஸைடஸ்
10. --------- பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.
(அ) அரிக்கமேடு (ஆ)ஆதிச்சநல்லூர் (இ)புகார் (ஈ)பல்லாவரம்
11. கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்.
(i) சேனானி - படைத்தளபதி
(ii) கிராமணி - கிராமத்தலைவர்
(iii) பலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது
(iv)புரோகிதர் - ஆளுநர்
மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது? (அ) i (ஆ) ii (இ) iii (ஈ) iv
12. செலியுகஸ் நிகேடரால் தலைநகரம் பாடலிப்புத்திரத்துக்கு ---- தூதராக மெகஸ்தனிஸ் அனுப்பப்பட்டார்.
(அ)ரோமானிய (ஆ) கிரேக்க (இ)சீன (ஈ) பிரிட்டிஷ்
13. குப்தர்காலம் குறித்த கீழ்க்கண்ட சான்றுகளில் ஏத நம்ப முடியாதது என்று நீங்கள் கருதுகிறீர்கள். (அ) இலக்கியச் சான்றுகள் (ஆ) கல்வெட்டுச் சான்றுகள் (இ) நாணயச்சான்றுகள் (ஈ) கதைகள்,புராணங்கள்
14. தர்க்கம் கறித்தமுதல் முழுமையானபௌத்த நூலைஎழுதியவர்
(அ)திக்நாகர் (ஆ) வசுபந்து (இ) ந்திரகாமியா (ஈ) வராகமகிரர்
15. ஹர்ஷர் கன்னோசியின் அரியணையை ---- இன் அறியுரையின் படிஏற்றுக்கொண்டார்.
(அ) கிரகவர்மன் (ஆ)அவலோகி தேஷ்வர போதிசத்வர் (இ) பிரபாகரவர்த்தனர் (ஈ) போனி
16. காம்போஜம் என்பதுநவீன-----
(அ) அஸ்ஸாம் (ஆ) சுமத்ரா (இ) ஆனம் (ஈ) கம்போடியா
17. கூற்று:முற்கார வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கானசான்றுகள் இல்லை
காரணம்: பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்
அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்றுசரியானது. காரணம் தவறானது. ஈ) கூற்று காரணம் இரண்டும் சரியானவை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.CBSEtips.in

18. உலகப் புகழ்பெற்ற கஜுராஹோகோவிலைக் கட்டியவர்கள்
(அ) ராஷ்டிரகூடர்(ஆ) டோமர் (இ)சண்டேளர் (ஈ)பரமர்
19. ----- ஒருகலத்துக்குச் சமம் ஆகும் (அ) 28 கிகி (ஆ) 27 கிகி(இ)32 கிகி (ஈ) 72 கிகி
20. கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்டபோர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.
(அ) ஹர்ஷசரிதம் (ஆ)பிரியதர்சிகா (இ)அவந்தி (ஈ)சர்வாகதா

## பகுதி–II 7X2=14

குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாஎண் 30-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.

21. வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் யாவை?
22. வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்துக
23. நமது ஆய்வுக்கு உதவும் திரிபீடகங்களை எழுதுக
24. சார்வாகம் குறித்துஅறிந்தது கூறுக?
25. மகாபத்மநந்தர் பற்றி குறிப்புஎழுதுக.
26. பண்டமாற்று முறை பற்றி விளக்குக?
27. ரோமிலிருந்து இந்தியாவிற்க இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் இந்தியாவிலிருந்து ரோமுக்க ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களை பட்டியலிடுக.
28. "யவன'என்ற சொல்லின். பொருள் என்ன?
29. தக்கோலபோரின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
30. சங்ககால பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

## பகுதி–III

7X3=21

குறிப்பு: ஏதேனும் ஐந்துவினாக்களுக்குவிடையளிக்கவும். வினாஎண் 24-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.

31. இந்தியாவின் இடைப்பழங்கற்காலத்தின் முக்கியக் கூறுகளைஎழுதுக.
32. ரிக் வேதகால சமூக பிரிவுகளைக் கோடிட்டு காட்டுக
33. காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக
34. சங்ககாலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்துதிணைகள் பற்றிஎழுதுக.
35. மினாண்டர்குறித்துநீங்கள் அறிந்தவை யாது?
36. குப்தர்காலத்தில் அறிவியல் வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.
37. புகழ் பெற்ற சைவ மூவர்கள் யாவர்?
38. ரஸியா சுல்தானா அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டது ஏன்?
39. சோழர்காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள் என்னென்ன?
40. இராஜேந்திரசோழன் "கடாரம் கொண்டான்"என அழைக்கப்படுவது ஏன்?

www.Padasalai.Net

## பகுதி–IV 7X5=35

குறிப்பு: அனைத்துவினாக்களுக்கும் விடையளிக்கவும்.

41. திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா மொகஞ்சதாரோ பற்றி எழுதுக? (அல்லது)
இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சி அடைந்தற்கான காரணங்கள் எவை?
42. சிந்துநாகரிகம் ஏன் ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது? (அல்லது)
பொ.ஆ.மு 6-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவு மலர்ச்சிக்கான காரணங்கள் யாவை?
43. சோழர் கால கட்டுமானக் கலையின் சிறப்புகளை எழுதுக. (அல்லது)
கஜினிமாமுதுவையும், கோரி முகமதுவையும் ஒப்பிட்டும், வேறுபடுத்தியும் காட்டுக.
44. மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கரைமேன்மைகளைவிளக்குக. (அல்லது)
குப்தர்காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம் விவாதிக்கவும்.
45. கலைக்கும், இலக்கியத்திற்கும் கனிஷ்கர் ஆற்றிய பங்கினை விவரிக்கவும் (அல்லது)
களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங் குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?
46. ஆசீவகம் குறித்து விளக்கவும், மேலும் இந்தியாவில் அதன் பரவலையும் எழுதுக.
இந்திய வரைபடத்தில் குப்தர்களின் ஆட்சிப்பகுதிகளின் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்.
1. மதுரா 2. நாளந்தா 3. கோசலம் 4. பிரயாகை 5. காசி
47. வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக. (அல்லது)
முகலாயர்ஆட்சியின் ஏதேனும் ஐந்துமுக்கியநிகழ்வுகளைகாலக்கோட்டில் குறிக்கவும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner